இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 62 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 25 – திங்கள்கிழமை 12 அக்டோபர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 62 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 25 - Monday 12 October 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் – அறிவுச் செல்வம் – கழகச் செல்வம் – கருத்துச் செல்வம் முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் (10.10.2026), சென்னை 'முரசொலி' வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாலை அணிவித்தும், திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பொன்முத்துராமலிங்கம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இயக்குநர் அமிர்தம், மு.க.தமிழரசு, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., 'முரசொலி' பொது மேலாளர் எஸ்.இராஜசேகர் ஆகியோர் படத்தில் உள்ளார்கள்.

தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரிப் போராடும் இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகள்

நெருக்கடி நிலை காலத்தை விட மிகவும் கொடுமையானது!

ஒன்றிய – த.வெ.க. அரசுகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.12-

"தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி போராடும் இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகள் நெருக்கடி நிலை காலத்தை விட மிகவும் கொடுமையானது" என்று ஒன்றிய மற்றும் த.வெ.க. அரசுகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி, டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி கட்சியினர் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக, கரப்பான் பூச்சி கட்சி நிறுவனர் அபிஜித் தீப்கே, மும்பையிலிருந்து விமானம் மூலம் டெல்லி வந்தார். அப்போது, டெல்லி விமான நிலையத்தில், விமானத்தில் வைத்தே அபிஜித் தீப்கேவை போலீசார் கைது செய்தனர். முன்னதாக, தமது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்ட அபிஜித் தீப்கே, நாங்கள் போராட்டம் தொடங்குவதற்கு முன்பே மோடி தமது தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டதாக பதிவிட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, டெல்லியில் போராட்டத்தில் பங்கேற்பதற்காக, ஜந்தர்மந்தர் நோக்கி வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், இளம் பெண்களை போலீசார் கைது செய்து வருகின்றனர். இதுவரை சுமார் 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஜந்தர் மந்தருக்கு போராட்டக்காரர்கள் வருவதை தடுக்கும் வகையில் முக்கிய சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதற்கிடையே, கரப்பான் பூச்சி கட்சியின் போராட்டத்தில் பங்கேற்கச் சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் பினராயி விஜயன், பிருந்தா காரத் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல், டெல்லியில் முன்னாள் முதல மைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் போராட்டத்தில் ஈடுபட முயன்ற நிலையில், அவரை வீட்டில் வைத்தே போலீசார் கைது செய்தனர்.

SIR முறைகேடுகளுக்கு காரணமான தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலகக்கோரி நாடு முழுவதும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், ஞானேஷ்குமாரை பதவியிலிருந்து நீக்கக் கோரி சென்னை அண்ணா சாலையில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை சிம்சனில் இருந்து பேரணியாகச் சென்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற மாணவர் அமைப்பினரை விஜயின் அராஜக காவல்துறை தடுத்து நிறுத்தியது. மேலும், மாணவர்களை தரதரவென இழுத்துச் சென்றும், குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றும் போலீசார் கைது செய்ததால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதனையடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டதாவது:-

இன்று டெல்லியில் அரங்கேறி வரும் நிகழ்வுகளும், அமைதிவழியில் போராடுபவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளும், நான் அனுபவித்த நெருக்கடி நிலைக் காலத்தின் வலி மிகுந்த நினைவுகளை மீண்டும் கண்முன் கொண்டு வருகின்றன.

டெல்லியிலும் நாடு முழுவதிலும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், மாணவர்கள், போராடும் இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

காவல்துறையை ஏவிவிடும் த.வெ.க. அரசு!

தமிழ்நாட்டில் போராடும் மாணவர்கள் மீது, பா.ஜ.க.வின் கிளையாகச் செயல்பட்டுக்கொண்டு, காவல்துறை அடக்குமுறையை ஏவிவிடும் த.வெ.க. அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அமைதி வழியில் போராடுவதற்கான தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் இளைஞர்கள் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது குற்றமல்ல. ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

ஞானேஷ் குமார் பதவி விலகலில் சமரசம் இல்லை!

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில் எந்தச் சமரசத்துக்கும் இடமில்லை. அவர் பதவி விலகுவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் சரிசெய்யப்பட்டு, அதன் சுதந்திரமும் நேர்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.





கழகத்தின் அறிவுச்செல்வம் 'முரசொலி' செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி, 'முரசொலி' அலுவலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்ட படத்துக்கும், கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்துக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் உடன் உள்ளார்கள்.